# இலங்கையில் போர் உடனடியாக முடிவடையாதாம்

-7-1991 பகுதி

[வாஷிங்டன்]
இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் உள்நாட்டு போர் தற்போது முடிவடைவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லையென வாஷிங்டனிலுள்ள ஆசிய கல்வி நிலைய எண்ணக் கருத்து பாரம்பரிய நிதியத்தின் உதவிப் பணிப்பா

[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூப்பா 4-50

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 27 இதழ்: 150
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-7-1991

## புலிகளுக்கு எதிரான யுத்தம் சரியே

[லண்டன்]
வடக்கு-கிழக்கில் புலிகளின் கடும் நெருக்கடியை அரசு எதிர்நோக்குவதால் புலிகளுக்கெதிராக அரசு நடவடிக்கை எடுப்பது சரியென பிரிட்டிஷ் வெளியுறவு அலுவலக அமைச்சர் பி. பி. ஸி.க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு பகுதியில் கடும் விமான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றுக் காலையிலிருந்து குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தவண்ணம் இருந்தன. இரு பொம்மர் விமானங்

[4ம் பக்கம் பார்க்க]

★ உள்விவகாரத்தில் தலையிடவேண்டாம்

# உதவி வழங்கும் நாடுகளுக்கு இலங்கை அரசு எச்சரிக்கை!

(கொழும்பு)
இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதை உடனடியாகத் தவிர்க்குமாறு உதவி வழங்கும் நாடுகளை இலங்கை அரசு எச்சரித்துள்ளது. இது குறித்து இலங்கையின் ஆட்சேபனையும் இந்த நாடுகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எந்த ஒரு நாடும், அதன் உள்நாட்டு விவகாரத்தில் வழிகாட்டவேண்டிய அவசியம் இல்லை என்றும் கொழும்பில் உள்ள அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர். (3ம் பக்கம் பார்க்க்)

## தமிழ் டாக்டர் சுட்டுக் கொலை

[யாழ்ப்பாணம்]
கொழும்பிலிருந்து புத்தளம் வழியாக கற்பிட்டி வந்து சேர்ந்த மன்னாரைச் சேர்ந்த வைத்தியர் (டாக்டர்) ஒருவரை மன்னார் படையினர் கைது செய்து கொண்டுபோய் சுட்டுக் கொன்றுள்ளதாக அங்கிருந்து வந்த மடுவாசி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் எழுத்தூரைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## உலகின் கவனம் இலங்கை பக்கம்

(லண்டன்)
உலகின் கவனம் தற்போது இலங்கைபக்கம் திரும்புவதாக லண்டன் பத்திரிகையான 'பினான்ஸியல் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் ரஞ்சன், திரு ராஜீவ் கொலை, மற்றும் கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு, பிரிட்டிஷ் தூதர் வெளியேற்றம், மன்னிப்புசபையின் இலங்கை விஜயம் என்பன இலங்கை விவகாரத்தை உலகளாவிய ரீதியில் பிரபல்யமடையச் செய்துள்ளதாகவும் 'பினான்ஸியல் ரைம்ஸ்' தெரிவித்துள்ளது. [சி]

## ஊரடங்கு அமுல்

(கொழும்பு)
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படும் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [க]

## மருத்துவ மாது பயிலுனர் விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)
சுகாதார அமைச்சு, மருத்துவ மாது பயிலுநர்களுக்கான ஆள் சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விவாகமாகாத இலங்கைப் பெண் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 19ம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும். இதற்கான கல்வித் தகைமைகள்

(2ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பகுதிக்கு செல்லாது மன்னிப்பு சபை திரும்பியது

(யாழ்ப்பாணம்)
வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் 'சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் இருவரும் லண்டன் திரும்பியுள்ளனர்.

இலங்கையில் சுமார் 20 நாட்கள் தங்கியிருந்த இவர்கள், வடக்கு-கிழக்கிற்குச் செல்வதற்குப் பல தடவை அனுமதி கோரியபோதும் அரசு அதனை நிராகரித்துவிட்டது.

இதையடுத்துக் கொழும்பில் உள்ள சில மனித உரிமைகள்

(4ம் பக்கம் பார்க்க)

## 9,000 அப்பாவித் தமிழர் படையினர் தடுப்புக் காவலில்

[லண்டன்]
வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 9,000 அப்பாவித் தமிழர்கள் இலங்கை படையினரால் பிடிக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக 'சர்வதேச மன்னிப்புச் சபை' நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

நிராயுதபாணியான அப்

(4ம் பக்கம பார்க்க)

## பலவீனமடைந்த நிலையில் அரசு; புலிகளுடன் பேச தயக்கம்

(கொழும்பு)
இலங்கை அரசு பலவீனமடைந்த நிலையிலிருப்பதால் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தாது பின்னடிப்புச் செய்வதாக 'கொழும்பு பத்திரிகை' ஒன்று தெரிவித்துள்ளது.

அண்மைக்காலச் சம்பவங்கள் புலிகளின் பலத்தை நன்கு வெளிப்படுத்துவதாக கூறியுள்ள அப்பத்திரிகை அதற்கு ஆதாரமாக அமைச்சர் ரஞ்சன், திரு. ராஜீவ் காந்தியின் கொலையையும், கூட்டுப்படைத் தலைமையக

[4ம் பக்கம் பார்க்க]

## வீர வணக்கம்

[யாழ்ப்பாணம்]
வவுனியா செட்டிகுளம் பகுதியில் இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த மாதம் 15ம் திகதி நடைபெற்ற மோதலில் படுகாயமடைந்து சிகிச்சைபெற்று வந்த வீரவேங்கை ரஜனி [மகாலிங்கம் நாராயணன்-மட்டக்களப்பு] நேற்று அதிகாலை வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். [வி]

## ராணுவ அதிகாரிகள் மூவரை கைதுசெய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)
வடபகுதியில் யுத்தமுனையில் நிற்கும் மூன்று இராணுவ அதிகாரிகளை உடன் கைதுசெய்யுமாறு கொழும்பு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஹிங்குராகொடையில் கடந்த மாதம் இசை நிகழ்ச்சி ஒன்றில் பொலிஸார் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாகவே மேற்படி மூன்று இராணுவ அதிகாரிகளையும் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(3-ம் பக்கம் பார்க்க)

★ ஆனையிறவு மோதலில்

## 9 இராணுவம் பலி

[யாழ்ப்பாணம்]
ஆனையிறவில் நேற்று இடம்பெற்ற கடும் மோதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கொழும்பில்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தமிழ் வழி

எழுத்தாளர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே நீங்கள் எழுதுபவற்றையும் பேசுபவற்றையும் தூய தமிழில் செய்ய விரும்புகிறீர்களா? கொக்கூர்கிழான் தொகுத்த 'தமிழ்வழி' நூல் உங்களுக்குத்துணை செய்யும். குழந்தைகளுக்கு தூய தமிழில் அழகிய பெயர்கள் வைப்பதற்கும் இந்நூலில் ஒரு பட்டியல் உண்டு. இது ஒரு வரதர் வெளியீடு. ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும்.
[சி-4964]

## கல்வி

உதவி ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கான கடந்தகால வினுவிடைத்தாள்களை மையமாகக் கொண்டு தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினல் தொடர் வகுப்புக்கள் மூலம் துரித பயிற்சி அளிக்கப்படும். S. ஜெயராஜா 204, மானிப்பாய் ரோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (சி 4963)

## வரதர் மாணவர் அகராதி

ஆங்கிலம் பயில்வோருக்கு மிகவும் தேவையான ஆங்கில, தமிழ் அகராதி, 18,400 ஆங்கிலச் சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்கள். மிகச் சிறந்த மலிவுவிலை அகராதி இதுவே. ரூபா 95. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். தொகையாகப் பெறுவதற்கு: ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி 4976)

## அறுவடை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தினர் இராமநாதபுரம் கமத்தில் 48 ஏக்கரில் நெற்செய்கை செய்யப்பட்டுள்ளது. இந்த நெற்செய்கை அறுவடை அடுத்தமாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக விவசாய பீடத்தால் அறுவடைவிழா ஒன்று நடாத்தப்படவிருக்கிறது. (153)

## கால அவகாசம் நீடிப்பு

(சென்னை)

புதுச்சேரியில் வாழும் இலங்கைத் தமிழர் தம்மைப்பற்றிய முழு விபரங்களையும் பதிவு செய்வதற்கான காலஅவகாசம் எதிர்வரும் 13ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## இராசி பலன்

**11 - 07 - 1991**

**வியாழக்கிழமை**

அமாவாசை பி. இ. 1-34 வரை.
திருவாதிரை மாலை 5-08 வரை.
மரணயோகம்
இராகுகாலம் பகல் 1-29 முதல் 2-59 வரை.
சுபநேரம் காலை 7-29முதல் 8-59 வரை.
அமாவாசை விரதம்.
இன்று பூரணசூரியகிரகணம்

மேடம்: அறிஞர் சந்திப்பு. தொழில் சிறப்பு, உயர்ந்த ஸ்தானம்.

இடபம்: கண்கலங்குதல். மறைமுக சிந்தனை. யோசனை.

மிதுனம்: தியாக சிந்தனை. மாதா உதவி. காரிய சிறப்பு

கடகம்: மாமனுர் வெறுப்பு. கடிதசெதால்லை. வரவின்மை.

சிங்கம்; தொழில் பாராட்டு. வாக்கு வசீகரம். பணவரவு.

கன்னி; குடும்ப சிறப்பு. உல்லாசபயணம். வெகுஜன மதிப்பு.

துலாம்; அற்பர் நேசம். காரியதடை. மனக்குறை.

விருச்சிகம்: கண்ணில் ரோகம், தவநிலை, புத்திரர் கவலை.

தனுசு: மகிழ்ச்சிப் பிரவாகம், தொழில் வெற்றி, அன்பளிப்பு.

மகரம்: கல்வியால் பெருமை. மனநிறைவு. குடும்ப சுகம்.

கும்பம்: எதிரிகள் துன்பம். உடல் உபாதை. அலைச்சல்.

மீனம்: மனைவியால் துயர், தொழில் கஷ்டம். அந்நிய வாசம்.

- ஜோஸ்யர்

## மருத்துவ மாது

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

★ க. பொ. த.[உயர்தரம்] பரீட்சையில் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவற்றில் மொழியில் அல்லது இலக்கியமும் எண்கணிதமும் அல்லது தூயகணிதமும் அல்லது வர்த்தகஎண்கணிதமும் கணக்கியலும் ஆகிய பாடங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.

★ க. பொ. த. (சாதாரணப்) பரீட்சையில் அல்லது பின்வரும் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தமிழ்மொழி அல்லது இலக்கியம் எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது வர்த்தக எண்கணிதமும் கணக்கியலும் வேறு நான்கு பாடங்கள்.

இருப்பினும் 5 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் பாடங்களில் 4 பாடங்களில் திறமை சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவையாவன தமிழ் மொழியும் எண்கணிதமும் அல்லது தூயகணிதம் அல்லது வர்த்தக கணிதமும் கணக்கியலும் தேவைப்படும் சித்திகள் யாவும் இரு தடவைக்கு மேற்படாத விதத்தில் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது தேசிய கல்விப் பொதுத் தராதரம் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. குறைந்த பட்சம் 4 பாடங்களில் B தரம் சித்தியுடன், முதல்மொழி, கணிதம் என்பன அடங்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

1991 யூலை 19 ம் திகதியன்று 18வயதுக்குட்பட்டவராகவோ 40 வயதுக்கு மேற்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

உயரம் 4 அடி 10 அங்குலத்திற்கும் குறைவாக இருத்தல் கூடாது.

விண்ணப்பதாரிகள் மீள் அளிக்கப்படாத 100 ரூபாவுக்கான பணத்தை ஏதாவது ஒருதபாற்கந்தோரில் பரீட்சை ஆணையாளரின் பெயரில் செலுத்தி அதற்கான ரசீதை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி மாவட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருக்கிறது.

மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் ஏனைய விபரங்களையும் ஈழநாடு அலுவலகத்திலும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (153)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீபாலகதிர்காமம் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை முதல் 27ம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

லொறியில் வந்து கொண்டிருந்த இளைஞரொருவர் லான்ட்மாஸ்டர் மோதியதில் வலது காலில் கடும் காயங்களுக்குள்ளாகி யாழ் போதனு வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புளியங்கூடலிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது யாழ். கன்னுதிட்டியில் வசித்துவரும் பேரம்பலம் கரன் (வயது-22) என்பவரே கே. கே. எஸ். வீதி தட்டாதெருச் சந்தியில் நடந்த விபத்தில் காயப்பட்டவராவார். (56)

## ஆலய புனரமைப்பு

[வேலணை]

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அழிவுற்ற நிலையில் இருந்துவரும் ஸ்ரீபொன்னம்பலவாணர் ஆலயத்தை புனருத்தானம் செய்து நித்திய பூசைகளை செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் முன்வந்துள்ளனர். (75)

## விசேட ஆணையாளர்

[பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் விசேட ஆணையாளராக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. செல்லமுத்து ஸ்ரீனிவாசன் உள்ளூராட்சித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். (52)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

## அந்தியேட்டி நிகழ்வு, சபிண்டீகரண அழைப்பு



## திருமதி அன்னப்பிள்ளை கந்தையா

மலர்வு; 05-07-1903 — உதிர்வு: 14-06-1991

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உருத்திரபுரத்தில் வாழ்ந்தவருமான இவர் 14.06.91 இல் சிவபதமடைந்தார். அன்னரது ஈமக்கிரியைகள் 16.06.91 இல் உருத்திரபுரத்தில் நடைபெற்றது.

அன்னர் அமரர் நா. கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், அமரர் அ. குணமணி, நல்லையா [கணேசபுரம்], க. பரன்னம்மா [உருத்திரபுரம்], தம்பியையா [ஓய்வுபெற்ற தபாலதிபர்] ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞா. அந்தோனிப்பிள்ளை [பரந்தன்], அமரர் ந. பராசக்தி, ந. அமிர்தராணி [கணேசபுரம்], கு. கந்தையா [உருத்திரபுரம்], த. மனேன்மணி [Retired Nursing Officer] ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.


அன்னரது அந்தியேட்டிக் கிரியைகள் 12.07.91ல் இரணைமடு கோரையன்கட்டு ஆற்றில் 9 மணிக்கு நடைபெற்று, பின் 14.07.91 இல் வீட்டுக்கிரியைகள் உருத்திரபுரத்தில் நடைபெறவுள்ளது.

இப்புண்ணிய கிரியைகளில் தாங்களும் பங்குபற்றி அன்னரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

126, D-10,
உருத்திரபுரம். (சி 4972)

# இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலி!!



தவில்மாமேதை இணுவையூர்

## அமரர் என். ஆர். சின்னராசா

பிரிவுகுறித்து விநாயகர் படிப்பகம்
உடுப்பிட்டி வழங்கும்

## அஞ்சலிப்பா

தோற்றம் 24.03.1934 — மறைவு: 06.07.1991

எண் சீர்விருத்தம்

ஈழத்தின் எழிலோனே தவிலை யேந்தி
இசைக்கென்றே தன்னையர்ப் பணித்துநின்ற
தாளமது தவருத தவிலின் மேதை
தனித்தவிலில் தலைசிறந்த சின்னராஜன்
மேளமது கையிலே எடுத்து விட்டால்
மின்னுமிடி முழக்கமெனும் தவிலில்நாதம்
ஆழமது கண்டிட்ட அறிஞர் யாவரும்
அழுதழுது நிற்கின்றுர் அவனை எண்ணி;
சிங்கப்பூர் மலேசியா இந்தியாவில்
சிறப்புமிகு விருதுபல சேர்ந்தே பெற்ருய்
எங்கெங்கு தமிழ்முழக்கம் கேட்குந் தோறும்
அங்கங்கு உன்னிசைதான் முழங்கிநிற்கும்
தங்கமெடல் பலபெற்ருய் தவிலின் மேதை
தனித்தவிலின் சாதனையால் தனியே நின்ருய்
தங்கமனக் கலைஞன் இவன் சாய்ந்துபோக
தமிழனுக்கே கவலை ஒன்று கூடிற்றம்மா

இமையாளன்
உடுப்பிட்டி.

விநாயகர் படிப்பகம்,
நிர்வாகிகளும் உடுப்பிட்டி விஸ்வகுல மக்களும்.

(சி4980)

# வவுனியா ஆஸ்பத்திரியில் மருந்துகள் திருட்டு

(மாங்குளம்)

வவுனியா அரசாங்க ஆஸ்பத்திரியில் கடந்த சில மாதங்களாக மருந்துகள் திருடப்பட்டு வருவதால் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக மரணங்கள் சம்பவிப்பதாகத் தெரியவருகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இவ்வைத்தியசாலை இருந்தும் அடிக்கடி மருந்துத்தட்டுப்பாடும், மருந்துத் திருட்டும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலையில் பஞ்சு, பிளாஸ்டருக்குக்கூட பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நாளாந்தம் 300 நோயாளிகள் நோயைக்குணப்படுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர். (150)

# திறந்துவைத்து விற்கப்பட்ட பாண் புதைக்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தை முன் பக்கத்தில் சுகாதாரமற்ற முறையில் திறந்து வைத்து விற்பனை செய்யப்பட்ட பாண் திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டு புதைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் பண்டத்தரிப்பு பதில் சுகாதார பரிசோதகர் திரு. என். சச்சிதானந்தம் சகிதம் கடந்த சனிக்கிழமையன்று பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள பாண் பேக்கரிகள், தேனீர்க்கடைகள், உணவு சாலைகள் ஆகியனவற்றில் திடீர் பரிசோதனை நடத்தினர்.

இப்பரிசோதனையின் போது சுகாதார விதிகளுக்கு இணங்க உணவுப் பொருட்களை மூடி வைத்து ஈக்கள் மொய்க்காதவாறு விற்பனை செய்ய வேண்டும் என்றும் திகதி காலாவதியான பால்மா, குளுக்கோஸ் போன்றபொருட்களை விற்பனை செய்யக்கூடாது என்றும் கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. (72)

## இராணுவ அதிகாரிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இசை நிகழ்ச்சிக்கு சென்ற மேற்படி 3 இராணுவ அதிகாரிகளினதும் தலைமையிலான இராணுவ அணி அங்கு கலாட்டா விளைவித்த போது இடம்பெற்ற மோதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இவர்களால் அடித்துக் கொல்லப்பட்டார். பலபொலிஸார் படுகாயமடைந்தனர்.

இதையடுத்துஇக்கொலையில் சம்பந்தப்பட்ட 18படையினர் கைது செய்யப்பட்டனர். ஆனால இவர்களுக்கு பொறுப்பாயிருந்த 3 இராணுவ அதிகாரிகளும் உடனடியாக வடபகுதிக்கு சென்றுவிட்டனர். தற்போது அவர்கள் யுத்த முனையிலிருப்பதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவர்களை உடனடியாக கைதுசெய்யுமாறும் அது முடியாத பட்சத்தில் அவர்கள் அங்கிருந்து திரும்பியதும் அவர்களை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (சி)

## சிறுவர் அமைப்புக்கள்

(அச்சுவேலி)

புத்தூர் மேற்கில் மேஜர் முரளி ஞாபகார்த்தமாக சிறுவர் கல்விநிலையம், சிறுவர் விளையாட்டரங்கம், சிறுவர் பூங்கா முதலியன அமைக்கப்படவுள்ளது.

புத்தூர் மேற்கு மருதடியில் வீரவேங்கை மேஜர் முரளி ஞாபகார்த்த சிறுவர் அமைப்புக்களை நிறுவுவதற்கான நிலம் சிரமதான அடிப்படையில் சீர்படுத்தப்பட்டுவருகின்றது.

# குவைத்தில்காணமல்போன முன்னூறு இந்தியர்கள்

[புதுடில்லி]

குவைத்தில் வசித்த 300 இந்தியர்கள் காணமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்த பின்னரே இந்த முந்நூறு இந்தியர்களும் காணமல் போய்விட்டார்கள்.

ஈராக் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்துவைக்கப்பட்வர்களே இவ்வாறு காணமல் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## வருடாந்த உற்சவம்

[மாங்குளம்]

அல்வாய் வேவிலங்கை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை 12ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இமமாதம் 26ம் திகதி தேர், தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும். (150)

## ஒரு வாரமாக படகுசேவை இல்லை

(வேலணை)

நெடுந்தீவு குறிகாட்டுவான் துறைமுகங்களுக்கிடையில் சேவையாற்றி வந்த குமுதினிப்படகு கடந்த ஒரு வாரமாக பழுதடைந்ததினால் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

பழுதடைந்த படகை திருத்தித் தருவதாக காரைநகரில் உள்ள ஸ்ரீலங்கா கடற்படையினர் கூறி பொறுப்பேற்றுக் கொண்டு சென்றுள்ளதாகவும் அவ்வாறு கொண்டு சென்ற குமுதினிப்படகு இன்னமும் திருப்பி பிரயாண சேவைக்கு விடப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (75)

## முல்லைத்தீவில்

# தெங்கு பனம்பொருள் உற்பத்தி நிலையங்கள்

[மாங்குளம்]

முல்லைத்தீவில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பனம் பொருள் உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக இப்பகுதிப் படித்த இளம்பெண்களை இந்த உற்பத்தியில் ஈடுபடுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

கிராமங்கள்தோறும் உழைக்கும் மகளிர் குழுக்களை அமைத்து மேற்படி உற்பத்தியில் ஈடுபடச்செய்து அவர்களின் உற்பத்திப் பொருட்கள் பனையகம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக ஒட்டுசுட்டான் பகுதியில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது, முதலில் அன்னை பூபதி உழைக்கும் மகளிர் குழு, திலீபன் உழைக்கும் மகளிர் குழு, தினேஷ் உழைக்கும் மகளிர் குழு என மூன்று நிலையங்கள் அமைத்து இதில் எண்பத்தைந்து யுவதிகள் உற்பத்தியில் ஈடுபட்டு ளருகின்றனர்.

இதற்கெனக் கற்சிலைமடுவில் பனையகம் திறந்து வைக்கப்பட்டு உற்பத்திப் பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இப்பனையகத்தில் மட்கல உற்பத்திப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. [150]

## 18 இராணுவம் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வடகிழக்கு எல்லை நகரான நடுநனரேரா வெடிமருந்து கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பவம் ஒன்றில் 18 இராணுவத்தினர் கொல்லப்படடனர். 14 இராணுவத்தினர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வெடிவருந்து ஏற்றும் மூன்று இராணுவ ட்ரக்குகளும் இச்சம்பவத்தில் சேதமுற்றதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

# 25 தொன் தங்கம் இந்தியா அனுப்பியது

(புதுடில்லி)

இந்திய அரசு 'பாங்க் ஒவ் இங்கிலன்ட்' என்று அழைக்கப்படும் இங்கிலாந்து நாட்டு வங்கிக்கு 25 தொன் எடையுள்ள தங்கத்தை விமான மூலம் அனுப்பியுள்ளது.

இது அந்த வங்கி அளிக்கும் 200 மில்லியன் பவுணுக்கு அடமானமாக அனுப்பப்பட்டுள்ளது.

ஐ. எம். எவ்விடம் நீண்ட காலக்கடனைப் பெறும்வரை ஜப்பானிய வங்கியிலிருந்தும், இங்கிலாந்து வங்கியிலிருந்தும்

(4ம் பக்கம் பார்க்க)

## ஒய்வூதியம் பணமாக

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம்பெறுபவர்களுக்கு கடந்த மே மாதத்திற்கான ஒய்வூதியம் பணமாக வழங்கப்பட்டுவருகின்றது. (72)

# நாகர்கோவிலில் 13ம் திகதி ஆடைகள் கண்காட்சி

[பருத்தித்துறை]

யாழ். தொழில் திணைக்களத்தினால் வடமராட்சிகிழக்கு நாகர்கோவிலில் நடாத்தப்பட்டு வந்த நடமாடும் தையல் பயிற்சி நிலையத்தில் 25 இளம் பெண்கள் 9 மாத தையல் பயிற்சி நெறியைப் பெற்றுமுடித்துள்ளார்கள்.

இப்பெண்கள் பயிற்சிக்காலத்தின்போது தயாரித்த ஆடைகளின் கண்காட்சியும், விற்பனையும் இம்மாதம் 13-ஆம் திகதி நாகர்கோவில் தையல் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். தொழில் திணைக்கள பருத்தித்துறை தொழிலதிகாரி திரு. ஏ. பசுபதி தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியிலும், மலிவு விற்பனையிலும் யாழ். உதவி தொழில் ஆணையாளர் திரு. கே. சிவப்பிரகாசம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இதற்கான ஒழுங்குகளை தொழிற்றிணைக்கள தையல் பயிற்சி ஆசிரியை திருமதி எஸ். மங்களேஸ்வரி மேற்கொண்டு வருகிறார். (52)

## உள்விவகாரத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றி தெரியவருவதாவது: இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் மிகமோசமாக நடைபெறுவதை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கண்டித்துள்ளதுடன், இதில் சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளையும் உடனடியாக பதவி நீக்குமாறு அவை கோரியிருந்தன.

மேலும், இலங்கையில் மனித உரிமை நடவடிக்கை எவ்வாறு பேணப்படுகிறது என்பதை பொறுத்தே எதிர்கால உதவி அமையுமென்றும் அவை எச்சரித்திருந்தன.

இதையடுத்து உதவி வழங்கும் நாடுகளின் அறிக்கை இலங்கை அரசை பெரும் சினமடையவைத்துள்ளது. இலங்கையின் அரசியல், பொருளாதார நிலைகளை எவ்வாறு கையாள்வதென்பது அதன் உள்விவகரம் அதில் யாரும் தலையிடத் தேவையில்லையென்றும் இலங்கை இவர்களுக்கு பதிலளித்துள்ளது.

இதேவேளை அண்மையில் கொக்கல என்னுமிடத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனுதிபதி திரு. பிரேமதாஸா ஒருகட்டத்தில் தமதுரையில்: இலங்கையின் அரசியல் நிலைகுறித்தோ, பொருளாதார நிலைகுறித்தோ உதவி புரிவோர் வழிகாட்டத் தேவையில்லை. 'உணவுக்காக நாம் ஆன்மாவை அடகு வைக்கமாட்டோமென்றும்' கூறியதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## உபவள நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ், கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவு, வடமராட்சி கல்விக் கோட்ட உபவள நிலையத் திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக விடுதலை புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் கலந்து கொள்வார்கள்.

## கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழகத்திலுள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் பிரதி வெள்ளிதோறும் நடைபெறும் கலைநிகழ்ச்சியில் நாளைவெள்ளிக்கிழமை செல்வி பா. கண்ணும்பாள், செல்வி பா. நாகவல்லி ஆகியோர் வயலின் இசை வழங்கவுள்ளனர். திரு. என், பாலச்சந்திர சர்மா மிருதங்கம் வாசிப்பார்.

## வீரவேங்கைகள் ஞாபகார்த்த சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கிறீன்கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் 2-வது லெப்ரினன் உதயகுமார் (இ. அன்ரன் சுதாகரன்), 2வது லெப்ரினன் நிக்சன் (அ. நிக்சன்) பெனி ஆகியோரின் ஞாபகார்த்த போட்டிகளில் உதைபந்தாட்டப் போட்டியில் கிறீன்பீல்ட் விளையாட்டு கழகம் 2 – 0 கோல்களால் சென் செபஸ்ரியன் விளையாட்டுகழகத்தை தோற்கடித்தது.

2வது போட்டியில் வைக்கிங்ஸ் ஏ பிரிவு கோஸ்ரியினர் செபமாலை மாதா விளையாட்டு கழகத்தை 3 – 0 கோல்களால் தோற்கடித்தனர்.

இப்போட்டிகளுக்கு திரு. எஸ். எம். மரியநாயகமும், திரு. எஸ். சகாயநாயகமும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டியில் ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகத்தினர் சமூகமளிக்காததால் அரியாலை ஐக்கியவிளையாட்டுக் கழகத்தினர் நேரடி வெற்றியைப் பெற்றுக் கொண்டனர். 2வது போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸ் விளை. கழக அணியினர் 18-07 என்ற புள்ளி அடிப்படையில் ஊரெழுஇளைஞர் விளை. கழகத்தினை தோற்கடித்து வெற்றி பெற்றனர்.

இவ்விரண்டு போட்டிகளுக்கும் யாழ். விளையாட்டு அதிகாரி மத்தியஸ்தராக கடமையாற்றினர். இப்போட்டிகள் யாவும் கிறீன்கிங்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்றன.

## தீவக மக்களுக்கு

# 12-ம்கட்ட உணவுப்பொருள் யாழ். நகரில் வழங்கப்படும்

(வேலணை)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கான 12வது கட்ட உலர்உணவுப் பொருட்கள் மட்டும் யாழ்ப்பாணத்தில் முன்னர் இயங்கிய கிளைகளில் வைத்து வழங்கப்படும்.

உத்தியோகத்தர்களுக்கான (பணத்திற்கான) உலர்உணவுப் பொருட்களும் இத்துடன் வழங்கப்படும்.

ஏனைய அனைத்துக் கட்ட உலர்உணவுப் பொருட்கள் தீவகத்திலேயே வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (75)

## நிறுவை அளவை உபகரணங்கள் முத்திரையிடல்

(கொழும்புத்துறை]

உள்நாட்டு வர்த்தகப் பிரிவின் நிறுவை, அளவைப் பகுதியினர் இன்று வியாழக்கிழமை காலை 8-30 மணி முதல் பி. ப. 1-30 மணி வரை மருதனர்மடம் பிரதேச அபிவிருத்திச் சபைக் காரியாலயத்தில் நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிட ஏற்பாடு செய்துள்ளனர்.

சகல வியாபாரிகளும் தத்தமது நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரை வைத்துக்கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவை, அளவைத் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கே. நாகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளரர். [154]

★ பலத்த பாதுகாப்புடனிருக்கும்—
பெருமாளின் கோட்டையினுள்

# நுழைந்தவர் மர்மக் கொலை

(புதுடில்லி)

வடக்கு-கிழக்கு மாகாண முன்னுள் முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தங்கியிருந்த வாசஸ்தலத்துக்குள் மர்மான முறையில் நுழைந்த ஒருவர் பின்பு பிணமாக வீதியில் கிடக்கக்காணப்பட்டார்.

கடந்த மூன்றுமாதங்களுக்கு முன்பு திரு. வரதராஜப்பெருமாள் தங்கியுள்ள மத்திய பிரதேசத்திலுள்ள பலம்வாய்ந்த பாதுகாப்புகள் நிறைந்த அவரின் வாசஸ்தலத்துக்குள் வீரேச்குரு என்னும் வாலிபர் நுழைந்து மறைந்திருந்தபோது பாதுகாவலர்களால் கைதுசெய்யப்பட்டார்.

மேற்படி வாலிபர் கடந்த மாதம் 26-ம் திகதி விடுதலை செய்யப்பட்டார். இந்த வாலிபர் அண்மையில் பம்பாய் பிரதான வீதியில் பிணமாகக் கிடக்கக்காணப்பட்டாராம். [பூ-வி]

## 10,000 ரூபாவாக நிவாரணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்தோரை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்குத் தற்காலிகமாக வழங்கப்பட்ட நிவாரணம், 5.000 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ். அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இந்நிதி கிடைத்ததும் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அரச அதிபர். (152)

## மிதிவெடியில் சிக்கி படையினருக்கு சேதம்

[திருமலை]

திருமலை மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து புறப்பட்டு காட்டுப் பகுதிகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர், புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி, பலத்த சேதத்துக்குள்ளாகினர்.

கும்பிறுப்பிட்டி, குச்சவெளி காடுகளில் நேற்றும், நேற்று முன்தினமும்தேடுதல் நடத்திய இராணுவத்தினர் பலர் மிதிவெடிகளில் சிக்கி, மிக மோசமாக படுகாயமடைந்ததாகவும் தெரியவருகிறது. [வி]

## யாருடைய மோதிரம்

(யாழ்ப்பாணம்)

மண் மீட்பு நிதித் தொடர்பகத்தில் ஒரு மோதிரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டி, மாவட்டச் செயலகம் கோண்டாவிலில் பெற்றுக்கொள்ளவும். (வி)

## 5 மாதங்களின் பின் ஊழியர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

மன்னார் நீதிமன்றத்தில் கடமையாற்றிவந்த ஊழியர் ஒருவர், தள்ளாடி சிறிலங்கா இராணுவ முகாமில் தடுத்து வைக்சப்பட்டுக் கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பள்ளிமுனையைச் சேர்ந்த எல். பி. றேஜ் (29 வயது) என்பவர் கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்ட இவர், தற்போதுமன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (56)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியல் துறையின் கருத்தரங்குத் தொடர்-06ல் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு 'எமது பிரதேசத்தின் உயர் சூழலியற் சமநிலையை பேணுதல்' எனும் தலைப்பில் புவியியற்றுறை தலைவர் திரு. செ. பாலச்சந்திரன் உரையாற்றுவார்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பற்குணம் (இளைப்பாறிய ஆசிரியர்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், தற்போது 28 ESP பெர்னுண்டோ மாவத்தை வெள்ளவத்தையில் வசித்தவருமான முன்னுள் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய ஆசிரியரும் முன்னுள் கொழும்பு இந்துக்கல்லூரி உபஅதிபருமான சுப்பிரமணியம் பற்குணம் தமது கொழும்பு இல்லத்தில் நேற்றுமுன்தினம் (9-07-1991) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் மகேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக்கணவரும், வைத்திய கலாநிதி முருகதாஸின் (ராகம அரசினர் வைத்தியசாலை) அன்புத் தந்தையும், திருமதி செல்லத்துரை புஸ்பத்தின் சகோதரருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (11-07-91) வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு கொழும்பு வாசஸ்தலத்தில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி புஸ்பம் செல்லத்துரை குடும்பத்தினர்,
[க. சோமசேகரம் (நல்லதம்பி).
மல்லாகம்.
(சி-4979)

### புலவர் காசிநாதர் வேல்முருகன் (B. O. L.)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி முன்னுள் தமிழ்ப்பகுதித்தலைவரும், பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுத சுவாமி தேவஸ்தான தலைவருமாகிய புலவர் கா. வேல்முருகன் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செட்டிகுறுச்சி (சங்கானை மேற்கு) விதானையார் காசிநாதர், காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் ஏக புதல்வரும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், திருவரங்கன், பாலகிருஷ்ணன், உமா. பாலகாந்தன், காலஞ்சென்ற காயித்திரி, கௌரி சங்கர்' சத்திய நாராயணன், சிவப்பிரியா ஆகியோரின் அன்புத்தந்தையும், சங்கர நாராயணக் குருக்களின் மாமனும், வல்வெட்டித்துறையை சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் முத்துச்சாமி, காலஞ்சென்ற ஞானப் பூங்கோதை ஆகியோரின் மருமகனும், டாக்டர் கோபால சுந்தரம் (தலைவர், கால்நடை அபிவிருத்திச்சபை, கண்டி) காலஞ்சென்ற டாக்டர் ஞானசுந்தரம், புவனேஸ்வரி, கங்கேஸ்வரி, சிவசுந்தரம், விமலேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், மைத்துனர்களின் குடும்பத்தவர்களான புவனேஸ்வரி, ராணி, பவளகாந்தி, பத்மநாதன், இளம்பிறைநாதன், தமயந்தி, கருணாகரன், கமலாதேவி ஆகியோரின் அன்பரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (புதன்கிழமை) செட்டிகுறிச்சி ''கணபதீஸ்வரம்'' இல்லத்தில் நடைபெற்று சம்வில் துறையில் தகனக் கிரியைகள் நடைபெற்றன. இத்தகவலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்: திருவரங்கன் (மகன்)
செட்டிகுறுச்சி,
பண்டத்தரிப்பு. (சி-4981)

## இலங்கையில் மனிதஉரிமை மீறலை எதிர்த்து பிரிட்டன் குரல் எழுப்பும்

[லண்டன்]

இலங்கையில் இடம் பெற்றுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்களை பிரிட்டன் உலக அரங்கில் குரல் எழுப்பவுள்ளதாக பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைக்கு பிரிட்டன் பல தடவை எச்சரித்து வந்ததாயும் ஆனால் இலங்கை இதனை அலட்சியப்படுத்துவதாயும் அமைச்சு கண்டனமும் தெரிவித்துள்ளது.

மேலும் கிளஸ்ரோன் விவகாரத்தை பெரிது படுத்தி அவரை வெளியேற்றியதன் மூலம் இலங்கை அதனை நிருபித்துள்ளதாயும் அவ்வமைச்சகம் கூறியுள்ளது. [சி]

## காரைநகர் பொருட்கள் கம்பளையில் விற்பனை

[கம்பளை]

காரைநகரில் நிலைகொண்டுள்ளபடையினரால்கொள்ளையடிக்கப்பட்ட பெருமளவு மின்சார உபகரணப்பொருட்கள், மலையகத்தில் கம்பளை கடைகளில் விற்பனைசெய்யப்பட்டுவருகிறது.

காரைநகரின் சகலபகுதிகளிலும் இவை கொள்ளையிடப்பட்ட பொருட்களாகும். வர்ண விளக்குகள், றிப் சுவிச், மற்றும் பலவகை சுவிச் உட்பட பலவகை மின்சாரப் பொருட்களும் கம்பளைப் பகுதியில் விற்கப்பட்டுவருகிறது.

இதேபோல், வேறு பல இடங்களிலும் காரைநகரில் கொள்ளையடிக்கப்பட்ட மிகப் பெறுமதி வாய்ந்த பொருட்கள் விற்பனைசெய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள், இரு வை-8, ஒரு வை-12, மூன்று ஹெலிகள் இணைந்து கடும் தாக்குதல்களை நிகழ்த்தின.

படையினர் நாலாபுறமும் கடும் ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர். காலையிலிருந்து மாலைவரை இவ்விமானத்தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் நடைபெற்றவண்ணம் இருந்தன. (56)

### பலவீனமடைந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வெடிப்பையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில் பிரச்னையை உடனடியாகத் தீர்க்குமாறு சர்வதேச நாடுகள் இலங்கையை நெருக்கிவருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. [153-சி]

### தமிழ்ப் பகுதிக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகளைச் சந்தித்த இவர்கள், வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பான பூரண விபரங்களைப் பெறுத நிலையில் லண்டன் திருமபினர். (சி)

### 9 இராணுவம் பலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலை சமாளிக்க விமானப் படை விமானங்கள் கடும் விமானத் தாக்குதலை மேற்கொண்டுவருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. தொடர்ந்தும் இப் பகுதியில் மோதல் நடப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று நள்ளிரவு பலாலிப் பகுதியில் பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

### இலங்கையில

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் பேராசிரியர் நீத். ஜே. கொன்போய் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; இலங்கையில் மனித உரிமை மிக மோசமாக மீறப்பட்டுவருகிறது. இது உடனடியாகத் தடுக்கப்படவேண்டும்.

உள்நாட்டு போரை சுமுகமாக தீர்க்குமாறு அமெரிக்கா இலங்கை அரசை கோரிவருவதாயும் அவர் தெரிவித்துள்ளார். (153-சி)

### 9,000 அப்பாவித்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாவித் தமிழர்கள் அரசுப் படைகளால் அநியாயமாக சட்டத்திற்குப் புறம்பாக, அராஜகமான முறையில்சுடப்பட்டும் துப்பாக்கி முனையால் சின்னுபின்னமாக தாக்கப்பட்டும், உயிரோடு எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் மேலும் எவ்வளவு தமிழர் சிறையிடப்பட்டுள்ளார்கள் என்பது எவருக்குமே தெரியாதுள்ளதாயும் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (சி)

### 25 தொன் தங்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கடனைப் பெற இந்த தங்கம் அனுப்பப்பட்டுள்ளதாக இந்திய மத்திய வங்கி ஆளுநர் திரு. வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார். (பூ)

### தமிழ் டாக்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த ஆங்கில வைத்தியரானஜெயக்குமார் [35 வயது) என்பவரையே கடந்த வாரம் படையினர் கைது செய்து சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவரது உடலை படையினர் ஒப்படைக்கவில்லை என்றும், அடையாளம் காட்டமுடியாத நிலையில் உடல் இருந்ததென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [56)

### புலிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில், 1980ம் ஆண்டுகளில் ஜே. வி. பி.யிடமிருந்தும், தற்போது புலிகளிடமிருந்தும் அரசுக்கு ஏற்படும் பிரச்சனைகளைச் சமாளிக்க அரசு நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும்.

இதில் இராணுவம் நிதானத்தைக் கடைப்பிடிக்கவேண்டும், இதுவரை அது அப்படி செய்யவில்லையென்றும் குறிப்பிட்டார். [சி]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜுலை 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81